1979 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) உரிமைப் பிரச்சினைகள்

(அ) 'மன்றம்' இதழில் கட்டுரை எழுயுள்ள திரு. நெடுஞ்செழியன்மது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பேரவையின் 184-வது விதியின்கீழ் மாண்பு மிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் அவை உரிமை மீறிய செயல் குறித்து பிரச்சினை ஒன்றை பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. சுருக்க மாகச் சொல்லும்படி திரு. உமாநாத் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவரவர்களே, நான் எப்போதும் சுருக்கமாகத்தான் பேசுவேன்.

மார்ச் மாதம் 6-ம் தேதி அன்றைக்கு சிம்கோ மீட்டர் விஷய மாக அவையில் நடந்தது உங்களுக்கும் தெரியும். அப்போது அவையும் இரண்டு தடவை ஒத்தி வைக்கப்பட்டது. அது சம்பந்த மாக வெளியிலே பத்திரிகைகளோ, பிரஜைகளோ விமர்சனம் செய்தார்கள். அத்தகைய விமர்சனம்.

It should be with in fourwalls of fair comments

* பேர் காமென்ட்ஸ்-க்கு ஒரு கோட்பாடு இருக்க வேண்டும். அவையில் நடந்த ப்ரொசீடிங்ஸை திருத்திக் கூற யாருக்கும் உரிமை இல்லை. நாங்கள் அவையில் நடந்துகொண்டதற்கு உள்நோக்கம் கூற யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் திரு. நெடுஞ்செழியன் அவர்கள்தான் கையெழுத்திட்ட (சைன்ட்) ஆர்ட்டிகிள் ஒன்றை எழுதி இருக்கிறார்கள். இரண்டு தரம், இந்த அவை ஒத்திவைக்கப்பட்டது தெரிந்தது. நாங்கள் அன் றைக்கு கோஷம் போட்டாம். அதற்கு நான் தலைமை தாங்கினேன். ஆனால் நானே மற்றவர்களோ வன்முறை என்ற முறையிலே அவையில் ஈடுபடவில்லை. ஆனால் மன்றம் பத்தி ரிக்கை 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் தேதி அன்று ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அந்தக் கட்டுரையில் அவர் கூறுகிறார், தோழர் உமாநாத்தும் அவரைச் சார்ந்தவர்களும் குடியாட்சி பண்புகளையும் மரபுகளையும் கடைப்பிடிப்பதில்ல

திரு. ரா. உமாநாத்

என்ற முடிவோடும் தடியாட்சி தன்மைகளையே கைக்கொள்வது என்ற முடிவோடும்தான் அன்று சட்டமன்றப் பேரவைக்கு வந்திருக்கின்றனர் என்பது, அவரது கூற்றுக்களில் இருந்தே தெள்ளத் தெளிவாகத் தெரியவரும்.

அடுத்து மேலும் சொல்கிறார், '' தமிழக சட்ட மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கையாண்டுவரும் தடியாட்சித் தன்மைகளுக்கு இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சி, வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி, காந்தி காமராஜர் தேசிய காங்கிரஸ் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும் உடந்தையாக இருந்து வருகிறார்கள் '' என்று கூறி இருக்கிறார்கள்.

This is a distortion of fact to what has happened within the House. It is for the House to take action against us and not for him.

ஸ்லேண்டராகவோ இல்லை ப்ளாக்மைல் பண்ணுவதற்காகவோ உரிமை யாருக்கும் இல்லை. திரு நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் சில விவரங்களைக் கொடுத்து கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்கள். '' ஆதாயம் தேடும் நோக்கத்தோடு அரசியல் நடத்தி வரும் தோழர் உமாநாத் போன்றவர்கள் சட்ட மன்றப் பேரவையை போர்க்களமாகப் பயன்படுத்திக்கொண்டு, அன்று வன்முறை ஆர்ப்பாட்ட கிளர்ச்சியை நடத்தி இருக்கிறார்கள்.'' ஆதாயம் தேடுவதற்காக நாங்கள் அரசியல் நடத்தவில்லை. ஆதாயம் என்றால் ஊழல் செய்வது மட்டுமா ?

That is a most important portion of it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்ததைப் படித்து சுருக்கமாக விளக்குங்கள்.

திரு. ரா. உமாநாத் இந்த அவையை நான் கன்வின் பண்ண வேண்டும். நான என் ஆதாயத்திற்காக அரசியல் நடத்துகிறேன் என்பது அந்த சென்ட்டென்ஸ் அர்த்தம், வருகிறது. அது தான் என்று சொன்னால் நண்பர் நெடுஞ்செழியன் போயிருக்க வேண்டும். அப்படி நான் போகவில்லை. ' தட் சுட் நாட் பி டன் ' என் ஆதாயத்திற்கு அரசியல் நடத்துகிறேன் என்று சொன்னால் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் எப்படி என்று மட்டும் சொல்ல வேண்டுமே தவிர, சட்டமன்றத்தில் இல்லாத, வெளியில் இருக்கிறவரைப் பற்றி குறிப்பிடக் கூடாது. அது உங்கள் கருத்தாக இருக்கலாம். பேரவையில் நான் அனுமதிக்க இயலாது. அப்படிப் பேசாதீர்கள். பிரச்சினைக்கு வாருங்கள்.

திரு. ரா. உமாநாத் : என்னைப் பற்றி ஆதாயத்திற்கு அரசியல் நடத்துகிறேன் என்று நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னால் நான் பதில் சொல்ல வேண்டாமா ?

1979 ஏப்ரல் 19]

மான்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பற்றி பேச உரிமை உண்டு. ஆனால் அதற்குப் பதில் அவர்களுக்கு வெளியில் தரலாம். இங்கே அவை உறுப்பினருடைய மரியாதை எப்படி மீறப்பட்டது என்பதைப் பற்றி பேசுங்கள். அவரைப் பற்றி இங்கே பேசவேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : ஆதாயத்திற்கு அரசியல் நடத்துகிறேன் என்று சொன்னதால்தான் நான் சொல்கிறேன். அந்த முறையில்தான் அவர் எழுதியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாயத்திற்காக நடத்தவில்லை எனறு நீங்கள் சொல்வதற்கு உரிமை உண்டு. ஆனால் விளக்கங்கள் இங்கே வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : ஆதாயத்தைத் தேடிக்கொண்டு எந்த நேரத்திலும், எந்தக் காலத்திலும், நான் போனதில்லை. நான் அமைச்சராகவும் இருந்ததில்லை. ஆதாயம் தேடி கட்சி விட்டு மாறவில்லை. ஆதாயத்தைத் தேடி அவர் இருக்கலாம். கோர்ட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆளுங்கட்சியிடம் என்றைக்கும் ஓடினதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்னைக்கு வாருங்கள். முடியுங்கள்.

திரு. ரா. உமாநாத் : முதல் அமைச்சர் அவர்கள் எனனைப் பற்றி இந்த அவையில் பேசியிருக்கிறார்கள். அதை நான் படிக்கிறேன். அதாவது '' ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி என்று வைத்துக்கொண்டாலும் அல்லது சாதாரண போலீஸ்காரர் என்று வைத்துக்கொண்டாலும் ஏழ்மையில் இருக்கிறவர் லஞ்சம் வாங்காமல் என்ன செய்வார் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அதனால் அவர்கள் லஞ்சம் வாங்குவதை ஆதரிக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. லஞ்சம் வாங்குவதை அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். அவர்கள் பணத்தை விரும்பினால் இப்போது எப்படியெல்லாமோ இருந்திருப்பார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஒரு லட்சியவாதி. அந்த லட்சியத்திற்காக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்'' என்று நண்பர் நெடுஞ்செழியன் காரியதரிசியாக இருக்கக்கூடிய அந்தக் கட்சியின் பெரும் தலைவர் 'பிராங்காக' சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கிறபோது இவர்கள் இப்படி நடந்துகொண்டால், அது 'சிலாண்டர்' பண்ணுவதுபோல் இருக்கும். அதுதான் உரிமை மீறல் என் சொல்கிறேன்.

மான்புமிகு பேரவைத் தலைவர் : எழுப்பப்பட்ட பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால் அதன் ஆசிரியரிடமிருந்து விளக்கம் கேட்ட பிறகு நான் எனது தீர்ப்பைக் கூறுகிறேன்.*

* தேதி தீர்ப்பு அளிக்கப்பெற்றது.